# கொழும்பு இறையியல் கல்லூரி
## தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# பாடநெறி வழிகாட்டி
# 2020

உலகம் நம்மை கசக்கிப் பிடித்து அதன் அச்சுக்குள் போட அனுமதிக்கக் கூடாது, மாறாக நம் மனதைப் புதுப்பிப்பதன் மூலம் மாற்றப்பட வேண்டும் என்று வேதம் நமக்கு சவால் விடுகிறது (ரோமர் 12:1-2).

ஆழமாக வேரூன்றி, பாதகமான காலநிலையில் கூட செழித்து வளர்ந்து தனது பருவத்தில் கனிகளைக் கொடுக்கும் ஒரு அழகான மரமாக விசுவாசியினை, உருவகித்து வேதாகமம் நம்மை சித்தரிக்கிறது. (சங்கீதம் 1).

ஒவ்வொரு மரமும் வேறுபட்டவை - ஆனால் பலனுக்கான அது பெறும் வளங்கள் ஒன்றேயாகும் - அது வார்த்தையான வளமான மண்ணும் பரிசுத்த ஆவியின் ஜீவனை கொடுக்கும் நீருமாகும். இருதயங்களையும், மனதையும், வாழ்க்கையையும் மாற்றக்கூடிய தேவனின் வார்த்தையின் பெலனையும் அவருடைய ஆவியையும் அனுபவிக்க கிறிஸ்தவர்களுக்கு உதவ, CTS உள்ளது.

மாறிவரும் உலகத்தில், தேவனின் நீடித்த சகிப்புத்தன்மையை தரும் வார்த்தையில் வேரூன்றி, சம்பந்தப்படுங்கள். வேதாகமம், இறையியல், அறநெறி, விஞ்ஞானம், உளவியல் மற்றும் வரலாறு குறித்த CTS இன் அனைத்து கற்றலானது, தேவனுடைய இராஜ்யத்தில் ஆற்றலுள்ளவர்களாக மாற்றும், மற்றும் உருமாற்றும் முகவர்களை உருவாக்கும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீங்கள் எங்கிருந்தாலும், எதைச் செய்ய அழைக்கப்பட்டாலும், அதைச் சிறப்பாகச் செய்து, நீடித்திருக்கும் கனிளைக் கொடுங்கள்.

உங்கள் வேர்களை ஆழமாக வேரூன்றப் பண்ணுங்கள்.

மேலும், CTS உங்களுக்கு உதவும் உங்கள் வாழ்க்கைக் கதையின் ஒரு பங்காக நாங்கள் இருக்க விரும்புகிறோம்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தில் இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமை கொண்டது.**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரம் கொண்டது.**

# தொடர்புகொள்வற்கான தகவல்

| | |
|---|---|
| **தொலைபேசி** | **+94 11 5524257** |
| **இணையத்தளம்** | **www.cts.lk** |

**பதிவாளர்**
செல்வி ரன்மலி செனவிரத்ன registrar@cts.lk

**மாணவர் கணக்கியல்**
ஒகஸ்டின் செபஸ்டியன் augustin@cts.lk

**மாணவர் புலமைபரிசில்கள்**
திருமதி ரொஷெல் ஹேக்கல்-ரணசிங்ஹ rochelle@cts.lk

**நூலகம்**
திரு கெமரன் டேவி library@cts.lk

**தகவல் தொழில்நுட்பம்**
திரு நிர்மல பெர்னாண்டோ it@cts.lk

**பிரயோக ஊழியப்பயிற்சி**
திரு குமார் சுப்ரமணியம் kumar@cts.lk

**முதுமாணிப்பட்ட கற்கைநெறி**
போதகர் ஏர்னஸ்ட் நதீம் ma@cts.lk

**கல்விப்பீடாதிபதி**
போதகர் ரவின் கல்தேரா ravin@cts.lk

**கல்வி முன்னேற்றத்திற்கான தலைவர்**
கலாநிதி மனோ இம்மானுவேல் mano@cts.lk

**உப அதிபர்**
திரு பிரபோ மிஹிந்துகுலசூரிய prabo@cts.lk

**அதிபர்**
கலாநிதி ஐவோ பூபாலன் ivor@cts.lk

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| **தவணை 2: மே – ஆகஸ்ட்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - கொட்டாஞ்சேனை | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8-9** |
| இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்குப் பாடங்கள் | **10** |
| CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள் | **11** |
| **விரிவுரையாளர் விபரங்கள்** | **12** |
| **CTS கற்கைநெறிகள்** | **13** |

# பொதுவான தகவல்கள்

## CTS பாடநெறிகள்:

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரி பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 12 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்காலப் பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- பெரும்பாலான பாடநெறிகள் 24 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில 36 மணித்தியாலங்களைக் கொண்ட பாடநெறிகளும், 24 மணித்தியாலங்களும் + 12 மணித்தியாலங்களைக் கொண்ட பிரயோகப் பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளும் உள்ளன.

## CTS பாடநெறிக் கட்டணங்கள்:

அறிமுக கட்டணம்: ரூ 4000/= ஒரு பாடத்திற்கு

** மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த சிறப்பு ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர் போல மாணவாகள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.*

## CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?

பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தையும், பதிவுக்கட்டணத்தையும் கணக்காளர் காரியாலயத்தில் கையளிப்பதன் மூலம் பதிவினை மேற்கொள்ளலாம். பதிவுப் படிவங்களை எமது காரியாலயத்தில் அல்லது எமது இணையத்தளத்தில் (www.cts.lk) பெற்றுக் கொள்ளலாம்.

**தயவு செய்து அவதானிக்கவும்: உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.**

## பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறி ஒன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது சபைப்போதகரின் சிபாரிசுக் கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்தவொரு வேலை நாளிலும் (திங்கள்-வெள்ளி) காலை 9.00 - மாலை 4.30 மணி வரை பதிவினை மேற்கொள்ளலாம்.

**தயவு செய்து அவதானிக்கவும்:** குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

**தவணை 2: 25ம் திகதி மே 2020**

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**

கல்விசார் காரியாலயம்

011-5524257; registrar@cts.lk; www.cts.lk

# தவணை 2

## மே - ஆகஸ்ட் 2020

# நேர அட்டவணை: தவணை 2

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | **ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்**<br>மு.ப.9:00-11:15<br>வனஜா ராஜ்குமார் | **தலைமைத்துவ மாதிரிகள்**<br>மு.ப.9:00-பி.ப.12:00<br>கிறிஸ்துமணி செல்லையா | **புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>குமார் சுப்ரமணியம்<br>ஐக்கிய வேளை<br>மு.ப. 10:30-11:30 | **இறைவனும் உலகமும்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>இரா. ஹரிஹரன்<br>ஆராதனை வேளை<br>மு.ப. 10:30-11:30 | **திருச்சபை மாதிரிகள்**<br>மு.ப.9:00-பி.ப.4:00<br>நெப்போலியன் பத்மநாதன்<br>**ஆவிக்குரிய உருவாக்கம்**<br>மு.ப.9:00-12:00<br>குமார் சுப்ரமணியம் |
| பிற்பகல் | | **கற்கை முறைகள்**<br>பி.ப.3:00-5:00<br>செல்லதுரை. ஜோ. சந்ரசேகர் | | **திருச்சபை வரலாறு - I**<br>பி.ப.3:00-5:15<br>செல்லதுரை. ஜோ. சந்ரசேகர் | |
| மாலை | | | | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 2 (கொட்டாஞ்சேனை)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | | **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:15-11:15<br>வனஜா ராஜ்குமார் | | |
| பிற்பகல் | | ஆங்கிலப் பாடநெறி<br>பி.ப.2:00-பி.ப.4:00 | **பொதுவான நிருபங்கள்**<br>பி.ப.2:00-4:00<br>கிறிஸ்துமணி செல்லையா | | |
| மாலை | | **கிறிஸ்தவ அறநெறிக்கான அறிமுகம்**<br>பி.ப.5:45-7:45<br>இரா. ஹரிஹரன் | | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# தவணை 2
# மே - ஆகஸ்ட் 2020
# வாரநாள் வகுப்புக்கள்

## ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்

BTh தெரிவு
Dip விருப்பு

வரையறையில்லாத ஊழல், அநீதி, வன்முறைகள் எனப் பல விடயங்களிற்கு எம்முடைய சமுதாயம் முகம் கொடுக்கின்றது. தேவனுக்கு கனத்தை கொடுப்பதுடன் சமுதாயத்தை மாற்றியமைக்கும்படியாக நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும்? சமகாலப் பிரச்சனைகளிற்கு ஆமோஸ் அற்புதமான விதத்தில் பொருத்தமானதாக அமைவதுடன், உங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடிய வட்டாரத்திற்குள் நீங்கள் இடைப்படுகின்றபொழுது சிந்திப்பதற்கும், இருப்பதற்கும், செயற்படுவதற்கும் வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப. 9:00-11:15

ஆரம்பம்: ஜூன் 1

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## கற்கை முறைகள்

BTh கட்டாயம்
Dip கட்டாயம்

இறையியல் கல்வியின் பெறுமதிகள் எவை? கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வி சார்ந்த அடிப்படை பண்புகளைக் கண்டறியுங்கள். இப்பாடமானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப. 3:00-5:00

ஆரம்பம்: மே 26

புள்ளிகள்: 0 (2)

விரிவுரையாளர்:
**செல்லதுரை. ஜோ. சந்ரசேகர்**

## புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

BTh கட்டாயம்
Dip கட்டாயம்

புதிய ஏற்பாட்டு நூல்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதைக் கற்றுக் கொள்வதோடு ஒவ்வொரு நூலினதும் எழுத்தாளர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் சரித்திரப் பின்னணி ஆகியவற்றைக் குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளையும் ஆதித் திருச்சபையின் வரலாற்றையும் கொண்டிருக்கும். பல்வகைப்பட்ட நூல்களின் பெறுமதியை உணரவும், அனுபவிக்கவும் இப்பாடம் உதவியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப. 9:00-பி.ப. 12:30

ஆரம்பம்: மே 27

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**குமார் சுப்ரமணியம்**

# தவணை 2
# மே - ஆகஸ்ட் 2020
# வாரநாள் வகுப்புக்கள்

## இறைவனும் உலகமும்

BTh கட்டாயம்
Dip கட்டாயம்

இப்பாடத்தில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆண்டவருடைய அனைத்து குணாதிசயங்களும், அவருடைய படைப்பின் தன்மைகளும் ஆழமாக ஆராயப்படும். இது தேவனையும், உலகம் மற்றும் மனிதன் படைக்கப்பட்ட விதத்தையும் வேதத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும். சில வேத வல்லுனர்களால் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவைகளா? என்பதும் மதிப்பீடு செய்யப்படும் (உதாரணம்: உலகம் 6 நாட்களில் படைக்கப்படவில்லை!???).

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப. 9:00-பி.ப. 12:30

ஆரம்பம்: மே 28

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

## திருச்சபை வரலாறு - I
(கி.பி. 100 - கி.பி. 1517)

BTh கட்டாயம்
Dip கட்டாயம்

தன் சொந்த வரலாற்றை அறியாத ஞாபக மறதியுள்ள சமூகமாக நாமிருத்தலாகாது. திருச்சபை உருவான நாள் முதல் சபை சீர்த்திருத்தம் வரையிலான காலம், வரவிருந்த பல நூற்றாண்டுகளிற்கு முகம் கொடுக்கும்படி திருச்சபையை வடிவமைத்த அசாதாரண ஆண்கள், பெண்கள், நிகழ்வுகள், இறையியல்கள் போன்றவற்றால் நிரம்பியிருக்கின்றது. இப்பாடநெறி மூலம் திருச்சபையின் முதல் 1400 வருடங்களை வடிவமைத்த இரத்த சாட்சிகளும், துறவிகளும், தூதுப்பணியாளர்களும் இயக்கங்களும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப. 3.00-5.15

ஆரம்பம்: மே 28

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**செல்லதுரை. ஜோ. சந்ரசேகர்**

## ஆவிக்குரிய உருவாக்கம்

BTh தெரிவு
Dip விருப்பு

இப்பாடநெறியானது தேவன் விரும்பும் உருமாற்றத்தை நம்மில் ஏற்படுத்தும்படியாக அவர் நமக்குத் தந்திருக்கும் வளங்களையும் மற்றும் நம்மில் எதிர்பார்க்கும் ஒழுக்கங்களையும் வேதாகமத்தினூடாக ஆராய்வதோடு, அவற்றை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி தேவன் விரும்பும் உகந்த பாத்திரமாக நம்மை உருவாக்க வாய்ப்பளிக்கிறது. அத்துடன் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் மிக ஆழமாக வளருவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பத்தையும தருகின்ற பாடமாக அமைகிறது.

8 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப. 9:00-12:00

ஆரம்பம்: மே 29

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**குமார் சுப்ரமணியம்**

# தவணை 2
# மே - ஆகஸ்ட் 2020
# இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்குப் பாடங்கள்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுகலைப் பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அதற்குச் சமமான/அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இளமாணிப் பட்டத்திற்குப் பதிவு செய்தவர், ஆகக் குறைந்தது 60 புள்ளிகளைப் பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

## தலைமைத்துவ மாதிரிகள்

BTh கட்டாயம்

தலைமைத்துவமானது பல்வேறுபட்ட பாணிகளில் செயற்படுகின்றது என்ற உண்மையைக் கண்டறியுங்கள். தரிசனமுள்ள, முகாமைத்துவ, மேய்ப்பத்துவ, குழுவைக் கட்டியெழுப்பும், தொழிற்துறை தலைவர்கள் போன்ற பலவகைப்பட்ட தலைவர்களை நாம் காணலாம். நீங்கள் எப்படிப்பட்ட தலைவர்? ஏனைய தலைமைத்துவப் பாணிகளைக் கொண்ட தலைவர்கள் உங்கள் குழுவிற்கு ஏன் அவசியம்? நாம் சேவை செய்யும் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் அவர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயலாற்ற முடியும்? போன்ற முக்கிய கேள்விகள் இப்பாடத்தில் அலசி ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப. 9:00-பி.ப.12:00

ஆரம்பம்: மே 26

புள்ளிகள்: 3

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## திருச்சபை மாதிரிகள்

BTh கட்டாயம்

இன்றைய திருச்சபை பற்றிய இப்பாடத்தில் சபையின் சரித்திர, இறையியல் கண்ணோட்டத்தை ஆழமாகவும் விரிவாகவும் கற்றுக்கொள்ளலாம். அத்துடன் இது திவ்விய சாக்கிரமந்துகள் (திருவருட்சாதனங்கள்), கூட்டு வழிபாடு, சபையின் ஆளுகை முறை பற்றி மதிப்பீடு செய்து கற்றுக்கொள்ளுவதற்கான அரிய வாய்ப்பாகும்.

6 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப. 9:00-பி.ப.4:00

ஆரம்பம்: மே 29

புள்ளிகள்: 3

விரிவுரையாளர்:
**நெப்போலியன் பத்மநாதன்**

# தவணை 2
# மே - ஆகஸ்ட் 2020
# CTS இன் வடகொழும்பு கல்வி நிலையம் - கொட்டாஞ்சேனை

## பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

பழைய ஏற்பாட்டை புரிந்து கொள்வது கடினமாக உள்ளதா? கவலை வேண்டாம்! இப்பாடம் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றைக் குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழும் வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பலவகைப்பட்ட நூல்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடம் உதவியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப. 9:15-11:15

ஆரம்பம்: மே 27

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## பொதுவான நிருபங்கள்

புதிய ஏற்பாடு பிரிவுகளில் ஒன்றான “பொதுவான நிருபங்கள்” : எபிரேயர், யாக்கோபு, 1பேதுரு, 2பேதுரு, 1யோவான், 2யோவான், 3யோவான், யூதா ஆகிய 8 நூல்களைக் கொண்டது. இந்தப் பொதுவான நிருபங்களில், குறிப்பாக ஒழுக்கவியலும், கள்ள உபதேசத்திற்கான எச்சரிப்பும், கிறிஸ்துவோடு பரிசுத்த வாழ்வு வாழும்போது உண்டாகும் போராட்டங்களையும் குறித்து விசேட கவனம் செலுத்துகிறது. இவை குறித்த பரந்த அறிவை பெற்றுக் கொள்வதற்கு இப்பாடம் உதவி புரிகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப. 2:00-4:00

ஆரம்பம்: மே 27

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## கிறிஸ்தவ அறநெறிக்கான அறிமுகம்

கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் சந்திக்கும் பெரும் சவால்களில் உண்மையுள்ளவராய் இருப்பதற்கும் பரிசுத்தமாக வாழ்க்கை வாழ்வதற்கும் பெரும் சவால்களை சந்திக்கிறார்கள். குறிப்பாக மற்றைய கிறிஸ்தவர்கள் செய்யும் விடயங்கள் அறநெறி சார்ந்ததாக இருக்குமா என்பது பெரும் கேள்வியாகவே இருக்கிறது. உதாரணத்திற்கு பொய் சொல்லுதல், பணத்தை கையாளுதல், விக்கிரக ஆராதனையோடு தொடர்பு வைத்தல், மற்றைய சமயக் கலாச்சாரங்களோடு பிணைதல், வாடகைத்தாய் போன்ற விடயங்கள் குறித்த அறநெறிகளை அறிய இப்பாடமானது உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப. 5:45-7:45

ஆரம்பம்: மே 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

# விரிவுரையாளர் விபரங்கள்



**வனஜா ராஜ்குமார்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் இக்கல்லூரியின் உதவி நூலகவியலாளராக ஏழாண்டுகள் பணியாற்றியுள்ளார். சத்திய வசனம் நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு நிர்வாக ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ள இவர் பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருகின்றார். அத்துடன் கொழும்பு இறையியல் கல்லூரியின் கொட்டாஞ்சேனை கல்விப்பீடத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்படுகிறார்.



**செல்லதுரை ஜோ. சந்திரசேகர்,** BTh

சீயோன் மலைக்கூடார சபையின் தலைமைப் போதகரும், கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் “பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம்” என்ற பாடநெறியில் சான்றிதழைப் பெற்றவரும், கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கும் மேலாக கொழும்பு இறையியல் கல்லூரியின் இணை விரிவுரையாளராகவும், தற்போது கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரும், வட, கிழக்கு விரிவாக்கல் நிலையங்களுக்கான கண்காணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.



**குமார் சுப்ரமணியம்,** BTh, MA

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும் கல்விப்பீட உறுப்பினருமான இவர் பிரயோக ஊழியப்பயிற்சி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். அத்துடன் கறுவாத்தோட்ட பெப்டிஸ்ட் திருச்சபையிலே வேதாகமத்தை கற்பிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் மாத்திரமன்றி திருச்சபையின் தலைமைத்துவ செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin

சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்று மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளைச் செய்து, தற்போது கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவுரையாளராகவும், கல்லூரியின் விரிவாக்கல் நிலையங்களின் முகாமையாளராகவும் பணியாற்றி வருகிறார்.



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டுவரும் இவர் தற்பொழுது சபைகளில் சீஷத்துவப் பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகமக் கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.



**நெப்போலியன் பத்மநாதன்,** BTh, MTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் இணைக்கல்வியின் முன்னாள் முகாமையாளராகவும் கல்விப்பீட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர் இக்கல்லூரியின் பட்டதாரியுமாவார். ஐக்கிய இராஜ்ஜிய வேல்ஸ் தேசத்து Glamorgan பல்கலைக்கழக முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், தற்போது கற்பித்தல் மற்றும் பிரசங்கப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

# CTS கற்கைநெறிகள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு கற்கைநெறிக்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதைக் குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி ஐந்து மட்டங்களில் கற்கைநெறிகளை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனைத் தரக்கூடிய கற்கைநெறி எதுவென்பதைக் கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கைப் பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21ஆம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
***தேவைப்படும் மொத்தப் புள்ளிகள்: 36***

**ஆலோசனைப்பணியில் உயர்தரச்சான்றிதழ் (ACC)**
இது திருச்சபைக்கும் சமூகத்திற்கும் தேவையான திறமை வாய்ந்த, பகுதி நேர ஆலோசனைப் பணியாளர்களை கட்டியெழுப்புவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்றுக்கொடுக்கப்படும் மொழி: ஆங்கிலம்.
***தேவைப்படும் மொத்தப் புள்ளிகள்: 36***

**இறையியல் பட்டச்சான்றிதழ் (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்குத் தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
***தேவைப்படும் மொத்தப் புள்ளிகள்: 72***

**இறையியல் இளமாணிப்பட்டம் (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்குப் (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
***தேவைப்படும் மொத்தப் புள்ளிகள்: 108***

**முதுகலைப்பட்டம் (MA)**
இக்கற்கைநெறியானது சபைக்கான பிரசங்கிமார்கள், ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்றுக்கொடுக்கப்படும் மொழி: ஆங்கிலம்.
***முன் நிபந்தனைகள்: ஆகக்குறைந்தது இளமாணிப்பட்டம் மற்றும் ஆங்கில மொழியில் திறமை***

**மேலதிகத் தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்: 011-5524257; registrar@cts.lk; www.cts.lk

வடகொழும்பு கல்வி நிலையம்:
280/1 B ஜோர்ஜ் ஆர். டீ. சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.